2017 மார்ச் 21]

என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். பதில் இருக்கிறதா? இந்தக் கேள்விக்கு முன்பே பதில் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு, மாவட்ட அமைச்சரான நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி,* Detailed Project Report *தயாரிக்கவும், இருக்கின்ற சூழ்நிலையைப் பொறுத்து, ஒட்டன்சத்திரத்தில் எவ்வளவு காய்கறிக் கழிவுகள் கிடைக்கின்றன, எப்படிச் செய்யலாம் என்பதை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கண்டிப்பாக அதை பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

புதிய குடிநீர்த் திட்டம்

***2371—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சியில் புதிய குடிநீர்த் திட்டத்திற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2017 மார்ச் 21

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் உசிலம்பட்டி நகராட்சிக்கு வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ரூ.26 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. தற்போது ரூ.47 கோடி மதிப்பீட்டில் திருத்திய திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு மற்றும் நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டவுடன், திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் தமிழக முதலமைச்சர், மனிதப் பிறவியில், மனிதப் புனிதராக வாழ்ந்து, இன்றும் மறையாமல், அனைத்து மனிதர்களின் இதயங்களிலும் (மேசையைத் தட்டும் ஒலி) மன நிறைவோடு வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய, அந்த மனித தெய்வத்தை, தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். மதிப்புமிகு சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. இரவிச்சந்திரன் எழுந்து நின்றார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், இதெல்லாம் எதற்கு? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பா. நீதிபதி, நீங்கள் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. பா. நீதிபதி, நீங்கள் பேசுங்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களால், உசிலம்பட்டி தொகுதி மக்களின் நலன் கருதி, உசிலம்பட்டி நகராட்சியின் குடிநீருக்காக ரூ.26 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கீட்டின்படி, தற்போது, உசிலம்பட்டி நகரத்திலே 40,000 மக்கள் வசிக்கின்றார்கள். எனவே, குடிநீர் வடிகால் வாரிய மேலாளர் அவர்கள் இத்திட்டத்தை ஆய்வு செய்து, ஓராண்டு

2017 மார்ச் 21]

பராமரிப்புக்காக ரூபாய் 77 இலட்சம் தேவைப்படுகிறது எனவும், நகரத்தில் ஒரு நபருக்கு, நாள் ஒன்றுக்கு, 90 லிட்டர் தண்ணீர் தேவை என்றும், 40,000 மக்களுக்கு நாளொன்றுக்கு, 36 இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அங்கு தற்போது நாளொன்றுக்கு 12 இலட்சம் லிட்டர் முதல் 13 இலட்சம் லிட்டர் குடிதண்ணீர்தான் கிடைக்கிறது. இதுபோன்ற குறைந்த அளவிலே குடிநீர் கிடைக்கப்பெறுகின்றது. ஆகையால், நகரத்தில் வாரத்திற்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. அதுவும் ஆண்டிப்பட்டி–உசிலம்பட்டி–சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கிடைக்கப்பெறுகின்றது.

மேலும், நகரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிலுவையில் உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, ஒரு நபருக்கு 135 லிட்டர் தண்ணீர் தேவைப்படும். அப்படியென்றால், உசிலம்பட்டி நகராட்சிக்கு, ஒரு நாளைக்கு 55 இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவை. தற்போது மக்களின் நலன் கருதி, நகர்ப் பகுதியிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அவசர தேவையை முன்னிட்டு லாரிகள்மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது. அதனால், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்கு சம்பந்தப்பட்டதுதான். உசிலம்பட்டி தொகுதி மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தினால், அங்கு ஆழ்துளைக் கிணறு அமைத்தாலும், ஏறத்தாழ 800 அடி முதல் 900 அடி வரை* Borewell*மூலம் முயற்சி செய்தாலும், தண்ணீர் கிடைப்பது அரிதாக உள்ளது.*

முற்பகல் 10–20

ஆகவே உசிலம்பட்டி தொகுதி முழுக்க முழுக்க அரசின் உதவிகளை நம்பியே வாழக்கூடிய ஒரு பிற்படுத்தப்பட்ட பகுதியாகும். உசிலம்பட்டி நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாக தீர்ப்பதற்கு குடிநீர் வடிகால் வாரிய மேலாளர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, நீங்கள் சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

[2017 மார்ச் 21

நீங்கள் எழுதி வைத்து நிறைய படித்துக்கொண்டிருந்தால் எப்படி? கேள்வியைக் கேளுங்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய மேலாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, 24–02–2014 அன்று இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 47 கோடி ரூபாய் தேவை என்று அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களால் உசிலம்பட்டி தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டத்தை உசிலம்பட்டி தொகுதி மக்களுடைய நலன் கருதி இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 47 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து எங்களுடைய தொகுதி மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பணிவோடு கேட்டு அமர்கின்றேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்தப் பிரச்சினை பற்றி நன்றாகத் தெரியும். தமிழகத்திலே கடுமையான வறட்சி, வறட்சி என்றால் 142 வருடங்களுக்கு முன்னால் இப்படிப்பட்ட வறட்சி இருந்தது. நாம் எல்லாம் இந்த வறட்சியைப் பார்த்து இருக்க மாட்டோம். நம்முடைய முன்னோர்கள்தான் இந்த வறட்சியைப் பார்த்திருப்பார்கள். இது ஒரு இக்கட்டான சூழ்நிலை. மொத்தமாக தமிழகம் முழுவதும் 62 சதவிகிதம் மழைப் பொழிவு நமக்கு குறைவாக உள்ளது. இருந்தாலும்கூட நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இப்போதுகூட அந்தப் பகுதியில் லாரிகள் மூலமாக குடிதண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு பகுதியிலும் லாரிகள் மூலமாகவும், பல போர்வெல்கள் அமைத்தும் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், துறை வாரியாக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு மொத்தமாக 976.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல்,

2017 மார்ச் 21]

அவருடைய தொகுதியில் மொத்தமுள்ள 115 மினி பவர் பம்புகளில் 55 பம்புகளிலிருந்து மட்டும் குடிநீர் பெறப்பட்டு வருகிறது. 75 கை பம்புகளில், 10 பம்புகளிலிருந்து குடிநீர் பெறப்பட்டு வருகிறது. வறட்சி நிலையைச் சமாளிக்கும்பொருட்டு உசிலம்பட்டி நகராட்சியின்மூலம் 5 இடங்களில் நீர் ஆதாரம் கண்டறியப்பட்டு, புதியதாக ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதேபோல், குடிநீர் பகிர்மானக் குழாய்கள் இல்லாத பகுதிகளிலும், மேடான பகுதிகளிலும் நகராட்சிக்குச் சொந்தமான டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ், மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 சிறிய மின்விசைப் பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்போது கடுமையான வறட்சி இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பொறுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே முழு ஒத்துழைப்பு கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இயற்கையான சூழ்நிலையில் ஒருசில இடங்களில் மழை பொழிகிறது. ஆனால் catchment *பகுதிகளில் மழை பொழியவில்லை. மதுரை போன்ற பகுதிகளில் கடுமையான வறட்சி காணப்படுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலையை அனுசரித்து போர்வெல்கள் போடுவதிலும் சரி, அப்படியே பழைய போர்வெல்களை* flush *செய்வதிலும்சரி, பைப்லைன் அமைத்து லாரிகள் மூலம் தண்ணீர் கொடுப்பதிலும் சரி, விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே 47 கோடி ரூபாய் நிதி ஆதாரம் அளிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டம் உசிலம்பட்டி தொகுதி மக்களுக்காக கண்டிப்பாக கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, முதல் கேள்வியிலே நிறைய கேட்டுவிட்டீர்கள். ஆகவே சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக என்னுடைய உசிலம்பட்டி தொகுதி மக்களின் சார்பாக நன்றி கூறி அமர்கின்றேன், நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற என்னுடைய தொகுதியான அருப்புக்கோட்டை நகரம், அதேபோல் விருதுநகர் நகரம் ஆகியவற்றில், இப்போது 12 நாட்களுக்கு ஒரு முறை, 15 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வழங்கிக்கொண்டிருக்கின்றோம். அருப்புக்கோட்டை நகராட்சிக்கு வைகையிலிருந்து ஒரு திட்டமும், தாமிரபரணியிலிருந்து ஒரு திட்டமும், ஆக இரண்டு திட்டங்கள் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருந்தன. அதிலே, வைகை முழுவதுமாக வற்றிவிட்ட காரணத்தால், தாமிரபரணியிலிருந்து மட்டும்தான் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருந்தோம். இப்போது தாமிரபரணியிலும் தண்ணீர் இல்லாத காரணத்தால் 12, 15 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, தாமிரபரணியிலிருந்து இன்னும் ஒரு திட்டத்தை அரசாங்கம் உடனடியாக ஆய்வு செய்து, அருப்புக்கோட்டை நகராட்சிக்கும், விருதுநகர் நகராட்சிக்கும் செய்து கொடுப்பீர்கள் என்றால்தான் தண்ணீர் பிரச்சினை தீரும். இல்லையென்றால், தண்ணீர் பிரச்சினை நிரந்தரமாக தொடர்ந்து இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, உடனடியாக, அவசரத் தேவையாக அருப்புக்கோட்டை நகராட்சிக்கும், விருதுநகர் நகராட்சிக்கும் தாமிரபரணியிலிருந்து மற்றொரு திட்டம் கொடுப்பதற்கு வேண்டிய பணிகளைச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகின்றேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாமிரபரணி ஆற்றிலிருந்து ஒரு புதிய திட்டத்தை அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் ஆகிய இரு நகராட்சிகளுக்கும் சேர்த்துக்

2017 மார்ச் 21]

கேட்டிருக்கிறார்கள். துறை அதிகாரிகளைக்கொண்டு ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின் கண்டிப்பாக அத்திட்டம் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

54—

பொறியியல் கல்லூரி

***5532—திரு. வீ. அலெக்சாண்டர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, அம்பத்தூர் பகுதியில் பொறியியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தொகுதி, அம்பத்தூர் பகுதியில் பொறியியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், இருக்கையில் இல்லை,

வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.